புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/02 - March 2023

====================================================================

# இஸ்லாமியத் தமிழ்ச் சிறுகதைகளில் எதார்த்தக் கூறுகள்

# *ELEMENTS OF REALISM IN ISLAMIC TAMIL SHORT STORIES*

====================================================================

**ஆய்வாளர்**

***பா. அப்துல்லா,*** *முனைவர் பட்ட ஆய்வாளர்,*

*முதுகலைத்தமிழாய்வுத்துறை,*

*ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி),* ***(பாரதிதாசன் பல்கலைக் கழக இணைவு பெற்றது)***

*திருச்சிராப்பள்ளி - 620 020.*

**நெறியாளர்**

***முனைவர் ஷே. நாகூர் கனி,***

*இணைப்பேராசிரியர்,*

*முதுகலைத் தமிழாய்வுத்துறை,*

*ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி),*

*திருச்சிராப்பள்ளி - 620 020.*

====================================================================

**ஆய்வுச் சுருக்கம்**

இஸ்லாமிய நெறிமுறைகளையும், இஸ்லாமியர்களின் வாழ்வியற் போக்கினையும் எடுத்தியம்பும் வகையில் இஸ்லாமியத் தமிழ்ச் சிறுகதைகள் படைக்கப்பட்டு வருகின்றன. இச்சிறுகதைகளில் இஸ்லாமியர்களின் அன்றாட வாழ்வியற் போக்கினைச் சிறுகதை ஆசிரியர்கள் பதிவாக்கும் பொழுது 'நடப்பியல்' அல்லது 'எதார்த்தவியல்' என்ற இலக்கியக் கோட்பாட்டின் கூறுகளும் இடம்பெறுகின்றன. அவ்வகையில் சகோதரத்துவத்தையும், சமத்துவத்தையும் பேணுவதற்குப் பதிலாக மாறி நடக்கும் மனிதர்களையும், இஸ்லாத்தில் முற்றிலும் தடைசெய்யப்பட்ட வரதட்சணையின் மூலம் நிகழும் கொடுமையினையும், இஸ்லாமியர்கள் இடையே இருக்கும் வறுமையினையும், ‘தலாக்’ என்னும் மனமுறிவில் அவ்வப்போது வெளிப்படும் சுயநலத்தை எடுத்துக்காட்டுவதன் மூலம் இஸ்லாமியர்களின்

*வாழ்வியலில் இடம்பெறும் எதார்த்தவியல் கூறுகள் இஸ்லாமியத் தமிழ்ச் சிறுகதைகளில் இடம்பெறுவது புலனாகிறது.*

***கலைச்சொற்கள்:*** *எதார்த்தவியல், நடப்பியல், ஜமாத், மஹர், ஜகாத், கப்று, மோதின், முஸாபிர், பாத்திஹா*

***முன்னுரை***

*படைப்பாளி தான் உணர்ந்ததைப் பிறருக்கும் உணர்த்தும் வகையில் அழகியல் கூறுகளோடு இலக்கியத்தைப் படைத்துள்ளான். அவ்விலக்கியங்கள் பல்வேறு வகைமைகளாக வளர்ச்சியடைந்துள்ளன. சமயம் சார்ந்த அல்லது சமய அடையாளத்தோடு இனம் காணப்படும் இலக்கியங்கள் பொதுவாக அறிவுரை பகர்வனவாக உருவாக்கப்படுகின்றன. இஸ்லாமியர்களின் படைப்புகளும் இத்தகைய தன்மைகளோடு தான் உருவாக்கப்பட்டு வருகின்றன. 1980களிலிருந்து இஸ்லாமியர்களின் படைப்புகள் நவீனத்தன்மையோடும் விமர்சனப் பார்வையோடும் விளங்கி வருகின்றன. இஸ்லாமிய சமூகத்தின் எதார்த்தங்களையும் விளிம்பு நிலை மக்களின் வாழ்க்கையினையும் இன்குலாப், தோப்பில் முகம்மது மீரான், களந்தை பீர் முகமது, முஜீப் ரஹ்மான், ஃபிர்தவ்ஸ் ராஜகுமாரன், மீரான் மைதீன், கீரனூர் ஜாகீர் ராஜா போன்றவர்களின் படைப்புகள் படம்பிடித்துக் காட்டுகின்ற வகையில் இக்கட்டுரை அமந்துள்ளது.*

***ஆய்வு நெறிமுறைகள்***

*எதார்த்தவியல் என்னும் இலக்கியக் கோட்பாட்டினை விளக்குவதாலும் இக்கோட்பாட்டை இஸ்லாமியத் தமிழ் சிறுகதைகளோடு ஒப்பிடுவதாலும் விளக்கமுறைத் திறனாய்வும் ஒப்பீட்டு முறைத் திறனாய்வும் பயன்படுத்தப்பட்டுள்ளன.*

***எதார்த்தவாதம் விளக்கம்***

*நடப்பவற்றை நடந்தவாறே பதிவு செய்கின்ற பொழுது 'எதார்த்தவியல்' அல்லது 'நடப்பியல்' என்னும் இலக்கியக் கோட்பாடு உருப்பெறுகின்றது.*

> ***"'ரியலிஸம்' எனப்படும் எதார்த்தவாதம் வாழ்க்கையில் புறவயமான நேர்மையோடு முழுமையாக உள்ளதை உள்ளவாறு வரைந்து காட்டுவதை நோக்கமாகக் கொண்ட ஒரு கலை" (ந. பிச்ச முத்து, இலக்கிய இயக்கங்கள், ப. 175)***
> *என்கிறார் டாக்டர் நா. பிச்சமுத்து.*
>
> ***"எதார்த்தவாதம் என்பது வாழ்க்கையை அப்படியே அதன் அழகோடும் குரூரத் தோடும் சொல்வது" (டாக்டர் அ.கா. பெருமாள் ஆய்வுக்கட்டுரைகள், ப. 87)***
> *என்பார் அ.கா. பெருமாள்*

*எதார்த்தவாதத்தில் எந்த நிகழ்ச்சியும் தனிமைப்படுத்திப் பார்க்காமல் ஒட்டுமொத்த வாழ்க்கைச் சூழ்நிலையோடு பார்க்கப்படுகின்றது. மேலும், அச்சூழலில் இடம் பெற்ற காரணகாரியத் தொடர்புகளுடன் அந்த நிகழ்ச்சியைப் பொருத்திப் பார்க்கின்றனர். எதார்த்தவாதிகள் இதனைச் சமூக ஆய்வு என்றும் அழைக்கின்றனர்.*

***"எதார்த்தவாதமானது நடப்பியல், எதார்த்தவியல், உண்மைவாதம், மெய்மை இயல் எனப் பல சொற்களால் குறிப்பிடப்படுகின்றது. 'யதார்த்தம்' என்ற சொல்லுக்குப் பதிலாக நடப்பியல் என்ற சொல் இன்று பெரிதும் பயன்படுகின்றது" (தமிழ் இஸ்லாமியப் புனைகதைகள், ப. 70)*** எனும் கூற்று நோக்கத்தக்கது.

தமிழகத்தில் வாழும் இஸ்லாமியர்களின் பண்பாட்டு வெளிப்பாடாகவே இஸ்லாமியச் சிறுகதைகள் உள்ளன. மக்கள் எதிர்கொள்ளும் வாழ்க்கைச் சிக்கல்களையும் நடைமுறைகளையும் பதிவு செய்வது, 'எல்லாம் இறைவன் செயல்' என்று மதத்தின் மீது பழி போடுவதுமான பல்வேறு செய்திகளைச் சிறுகதைகளின் மூலம் காணமுடிகின்றது. இவ்வாறு நடப்பியலைப் பேசுவதால் இஸ்லாமியத் தமிழ்ச் சிறுகதைகளில் 'எதார்த்தவியல்' அல்லது 'நடப்பியல்' கோட்பாடு இடம்பெறுகின்றது.

***சமத்துவமின்மை:***

தமிழக இஸ்லாமியர்களின் வாழ்க்கை தமிழக எல்லைக்குள்ளாக நடத்தப்பட்டு வந்தாலும் அவர்கள் அந்நியர்களாக மற்ற சமூகங்களால் கருதப்படும் போக்கினையும் அதனால் கலவரங்கள் ஏற்படுவதையும் 'மதம்' என்னும் சிறுகதையில் இன்குலாப் விரிவாகப் பேசுகிறார். பெரும்பாலான மக்கள் சகோதர சமயத்தைச் சார்ந்தவர்களாக இருக்க அப்பகுதியில் வாழும் இஸ்லாமியர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களையும் பெரும்பான்மை இஸ்லாமியர்கள் வாழும் பகுதியில் இந்துக்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களையும் மதம் எனும் சிறுகதை மையப்பொருளாகப் பேசுகிறது.

கீரனூர் ஜாகீர் ராஜாவின் 'கட்டாந்தரை' என்னும் கதையில் இடம்பெறும்,

***"மீன்காரனாக வரும் நத்தர்ஷா தன் சொந்த உழைப்பில் கட்டிய வீட்டை இடித்துவிடுகின்றனர். இதனால் மனநிலை பாதிக்கப்பட்டவனாக அவன் மாறுகிறான். ஹசன் முகைதீனின் நெசவுக்காரத் தெருவில் நாவிதர் சமூகத்தைச் சேர்ந்த மன்சூரை தொழும் பொழுது அரவணைக்கும் சமூகம் தொழுகை முடிந்ததும் அவர்களைச் சமூகத்தில் அடிமைப்படுத்துகின்றது" (ஜாகீர் ராஜா, கட்டாந்தரை சிறுகதை, ப. 67)***

என்ற வரிகள் அங்கு நிலவக் கூடிய சமத்துவமின்மையைப் பேசுகின்றது.

இஸ்லாமியர்களின் செயல்பாடுகளை முறைப்படுத்தவும் இஸ்லாம் வலியுறுத்தும் வாழ்வியலை செயற்படுத்தவும், 'ஜமாத்துக்கள்' உள்ளன. ஆனால், இந்த ஜமாத்துக்கள் ஏழைகளையும் வசதி படைத்தவர்களையும் சமமாக நடத்தவில்லை. இஸ்லாம் கூறியுள்ளது போல ஜமாத்துகள் நீதி வழங்குவதில்லை என்பதை ஃபிர்தவ்ஸ் ராஜகுமாரின் 'தீர்ப்பு' என்னும் கதையும் 'பல்லாங்குழி விளையாட்டு' எனும் கதையும் விளக்குகின்றன.

***வரதட்சணை***

பள்ளிவாசல்களில் தொழுகை நடத்துபவர்கள் மற்றும் மற்ற வேலைகள் செய்யும் மோதினார்களும் உள்ளனர். இவர்களின் வறுமைகளைப் பல சிறுகதைகள் நமக்குச்

சித்தரித்துக் காட்டுகின்றன. தோப்பில் முகம்மது மீரானின் 'தஜ்ஜால் மேல் விழுந்த மாலை' என்னும் சிறுகதை மோதினார் பணியில் வேலை செய்த ஒருவர் வறுமையின் காரணமாகத் தான் பெற்ற பெண் பிள்ளைகளுக்குத் திருமணம் நடைபெறாததால் மிகுந்த வருத்தத்தோடு இறந்து போன நிகழ்ச்சியைக் கூறுகின்றது.

> ***"நாலும் மூனும் ஏழு, இன்னும் ஒன்று எட்டு, தாம் ஒன்று இத்துடன் சேர்த்தால் ஒன்பது பேருடைய வயிறுகள், நாற்பத்து ஐந்து ரூபாய் சம்பளம், தன்னுடைய வயிற்றுத் தேவைக்கே போதுமானதாக இருந்தது. மூத்த பெண்ணுக்கு ஒரு மாப்பிள்ளை பார்த்து நிச்சயம் பண்ணியாகிவிட்டது. ஹாஜி ஹோட்டலில் தண்ணீர் எடுத்துக் கொடுக்கிறான். ஆள் கொஞ்சம் அவலட்சனம்மாக இருந்தாலும் சீதனம் ரூபாய் ரெண்டாயிரம், ஒரு வாட்சும், மோதிரமும், ஆனா எழுத தெரியாதவனும், நேரம் பார்க்க வாட்சு, வர வர சீதனும் கூடிப் போய்ட்டு" (தோப்பில் முகம்மது மீரான், தஜ்ஜால் மேல் விழுந்த மாலை, ப. 36)***

என்ற தோப்பிலாரின் கூற்றிலிருந்து பள்ளிவாசலில் மோதினாராகப் பணியாற்றும் ஒருவரின் அவல நிலை புலப்படுகிறது. சிறந்த படைப்பாக மனிதனைப் படைத்த இறைவன் அவனுக்கு இதயம் ஒன்றைக் கொடுத்து அதில் வேதனை என்ற கூரம்புகளை ஏன் ஆழப் பதிய வைத்துள்ளான். எலும்புக்கும், தோலுக்கும் இடையில் ஈவிரக்கமற்ற இதயங்களையும் ஏனோ ஆண்டவன் படைத்து வைத்துள்ளான் என்பது உருக்கமான செய்தியாகும். தோப்பில் முகம்மது மீரானின் 'விளக்கு' என்னும் சிறுகதையில், ஏழ்மையின் காரணமாக வரதட்சணை தர இயலாத மம்மாலிசம் பிள்ளையின் கூற்றாக வரும்

> ***"பெண்ணைப் பெத்தவங்களுக்கு வேதனைக்குக் காரணம் வேறே சொல்லனுமா." (தோப்பில் முகம்மது மீரான், விளக்கு சிறுகதை, ப. 12)***
>
> என்ற தொடரும் வரதட்சணைக் கொடுமையினைக் காட்டுகின்றது. அதேபோல்,
>
> ***"தந்தையை இழந்து, நோயுற்ற தாயோடு வருந்தி வாழும் ஹமீதா என்ற இருபத்தெட்டு வயது பெண் வறுமையின் காரணமாகத் திருமணமாகாமல் வாடுவதையும் வேறு வழியில்லாத நிலையில் அறுபது வயது உள்ள முதியவரைத் திருமணம் செய்து கொள்ளும் அவல நிலையினை இச்சிறுகதை காட்டுகின்றது இது என் விதி! ஏழைப் பெண்களின் விதி வெறுமனே மேலும் மேலும் ஏன் சொல்லிக்கொண்டே போக வேண்டும். இறைவன் குற்றம்சொல்லவில்லை" (தோப்பில் முகம்மது மீரான், பவர்க்காரி சிறுகதை, ப. 56)***

என்ற ஹமீதாவின் புலம்பலை 'பவர்க்காரி' சிறுகதை பேசுகின்றது. இஸ்லாம் பெண்பிள்ளை பிறந்தால் நற்செய்தி கூறுங்கள் என்று சொல்லும் மார்க்கம். ஆனால் பெண் பிள்ளையை ஏன் பெற்றோம் என்று பெற்றோர்கள் புலம்பும் அவல நிலையினை இச்சிறுகதைகள் காட்டுகின்றன.

முஸ்லீம்கள் திருமணத்தில் வரதட்சணை முறை முற்றிலும் தடைசெய்யப்பட்ட ஒன்றாகும். அதற்குப் பதிலாக ஆண்கள் தான் பெண்களுக்கு 'மஹர்' என்னும் தொகையைக் கொடுத்து பெண்களைத் திருமணம் செய்ய வேண்டும். பெண்களிடத்தில் எந்தப்

பொருளுதவியும் எதிர்பார்க்கக் கூடாது என்பது இஸ்லாமியச் சட்டமாகும். ஆனால் அதற்கு மாற்றமாக சமூகத்தில் நிகழும் எதார்த்தத்தை இஸ்லாமியச் சிறுகதை ஆசிரியர்கள் தங்கள் கதைகளில் வெளிப்படுத்துகின்றனர்.

**விளிம்பு நிலை மக்களின் வாழ்வியல் அவலம்**

இஸ்லாமியர்களின் வாழ்க்கை முறையைத் தீர்மானிப்பதில் அவர்தம் பொருளாதாரச் சூழல் முக்கியப் பங்கு வகிக்கின்றது. பெரும்பாலான முஸ்லிம்களின் வருமானம் வெளிநாட்டு வேலைகள் மூலம் கிடைக்கின்றன. வெளிநாட்டு வேலைக்குச் சென்று இளைஞர்கள் படும் துன்பத்தினை ஜாகீர் ராஜாவின் ‘வெக்கை’ என்னும் சிறுகதை கூறுகின்றது. மீரான் மைதீனின் ’மஜ்னூன்’ எனும் சிறுகதையும் இவ்வகையானதுவே. தன் மனைவி மக்களை விட்டு வெளிநாட்டில் வாழும் வாழ்க்கை எத்தனை கொடுமையானது என்பதை இந்தச் சிறுகதைகள் பேசுகின்றன. நெசவுத் தொழில், பீடி சுற்றுதல், நாவிதத் தொழில், கபறு குழி வெட்டுதல், நிரந்தரக் குடியிருப்பு இல்லாமல் நாடோடிகளாக வாழும் முஸாபர்கள் போன்ற பல்வேறு மக்களைப் பற்றிய கதைகள் இஸ்லாமியத் தமிழ்ச் சிறுகதைப் படைப்பாளர்களால் நுட்பமாக படைக்கப்பட்டுள்ளன. தோப்பில் முகம்மது மீரானின் ‘சுருட்டுப்பா’ என்னும் கதையில், இறந்தவர்களுக்குக் குழிவெட்டும் தொழில் செய்பவரைப் பற்றியது. இத்தொழிலை விட்டு வேறு வேலைப் பார்க்கச் சொல்லும் மனைவியிடம்

> ***”இங்கு கஷ்டப்பட்டால் நாளைய மறுமையில் நன்மை கிடைக்கும். என் வாப்பாவும், வாப்பாவின் வாப்பாவும் எல்லோரும் கபுறு தான் வெட்டிப் பொளச்சாங்க. நான் ஏழாவது தலைமுறை தெரியும்மா? நமக்கு ஒரு மகன் இருந்தா கபுறுதான் வெட்டுவான்” (தோப்பில் முகம்மது மீரான், சுருட்டுப்பா சிறுகதை, ப. 206)*** என்கிறார்.

இந்தச் செய்தி தொழில் மீதான உறுதி மிகுந்த உறவைக் காட்டுகின்றது. மற்ற சமூகத்தில் இழிவாகக் கருதப்படும் இத்தொழில் இஸ்லாமியச் சமூகத்தில் இம்மை மறுமைப் பயனுடையதாகக் காட்டப்படுகின்றது. ஆனால், சுருட்டுப்பா இறந்துவிடும் சூழலில் அவர் பிணத்திற்கு யார் குழி வெட்டுவது என்னும் சிக்கல் ஏற்படுகிறது. ஊர் தலைவர்கள் நாவிதர்களை அழைக்க அவர்கள் மறுத்துவிடுகின்றனர். இவ்வாறு ஒவ்வொருவரும் இது எங்கள் தொழில் இல்லை என்று மறுத்துவிட கடைசியில் அவருடைய மனைவியே பிணத்தை ஆற்றில் தூக்கிப் போடும் அவல நிலையினைச் சுருட்டுப்பா சிறுகதை காட்டுகின்றது. இதே போல் தனக்குச் சொந்த பந்தங்கள் இருந்தும் தன்னுடன் பிறந்த சகோதரர்கள் வசதியான நிலையில் இருந்தும் வசதியற்றவரான தங்களுடன் பிறந்த அண்ணன் இறந்த செய்தி கேட்டும் மனம் வருந்தாத தம்பிகளைக் ‘கருந்தேளின் கொடுக்குகள்’ என்னும் சிறுகதையில் தோப்பில் முகமது மீரான் காட்டுகிறார்.

> ***“நூல் போல் மேல் நோக்கி உயரும் புகையில் மரணத்தின் வாடையைக் கலக்கச் செய்து ஊதுபத்தியாரிடம் வைத்திருப்பார்களேயானால் காற்றின் வாயிலாக அந்த***

***மரணச் செய்தியை சிலரேனும் மோந்து தெரிந்திருப்பார்கள். காசு சேமித்து வைக்கும் பனைஓலைப் பெட்டிக்குள் காசுக்கு பதில் பீடித்துண்டு ஒன்றையும் நெருப்பு பெட்டியையும் தவிர வேறு எதுவும் இல்லை" (தோப்பில் முகம்மது மீரான், 'கருந்தேளின் கொடுக்குகள்' ப.100)***

என்று 'கருந்தேளின் கொடுக்குகள்' எனும் சிறுகதை வறுமை நிலையின் கோரத்தை எடுத்தியம்புகிறது. தன்னுடன் பிறந்த சகோதரர்கள் உயர்ந்த பதவியில் இருந்தாலும் தன்னுடன் பிறந்தவர்கள் ஏழ்மையான நிலையில் இருந்தும் அவர்களுக்கு உதவி செய்ய முன்வராத நிலையினை 'கிளை நதிகள்' சிறுகதை எடுத்துரைக்கிறது.

***"மிகவும் சிரமத்தில் இருந்த கட்டத்தில் தான் வாப்பாவின் மௌத்து அவருக்கு ஒரு வாய்ப்பை வழங்கியது அவள் ஐதுரூஸ் மாமாவுடன் பயணிக்கும் போதே மனதில் கணக்கு போட்டுப் பார்த்துக் கொண்டாள். எப்படியும் நாற்பதாம் பாத்திஹா வரைக்கும் களக்காட்டில் தான் இருக்க வேண்டி வரும். அதுவரைக்கும் வாப்பாவின் புண்ணியத்தில் அன்வர் அக்கா வீட்டில் தன் குழந்தைகள் வயிரார உண்டு மகிழ்வார்கள் என்று" (களந்தை பீர்முகம்மது, கிளை நதிகள் சிறுகதை, ப. 14)***

தன் தந்தை இறந்துவிட்டார் என்ற செய்தியை விட தன் பிள்ளைகள் மூன்று வேலை கொஞ்ச நாள் நல்ல சாப்பாடு சாப்பிடும் என்ற மகிழ்ச்சி ஆயிஷாவுக்கு பெரும் நிம்மதியாக இருந்தது என்பதை இந்த சிறுகதை பேசுகிறது. தன்னுடைய குழந்தைகளுக்கு ஒரு நல்ல துணிமணிகள் கூட இல்லை என்பதை நினைத்து அவள் வருந்தும் நிகழ்வினையும் சிறுகதை பேசுகின்றது.

***"உடன் பிறந்தவர்களின் குழந்தைகள் அனைவருக்கும் நினைத்த மாத்திரம் கிடைத்துவிடுகிற இந்த வாய்ப்பும் வசதியும் தன் வாழ்க்கையில் மட்டும் அருகிப்போய்விட்டதோ" (களந்தை பீர்முகம்மது, கிளை நதிகள் சிறுகதை, ப. 15)***

என்கிறாள்.

சோற்றுக்கு நாயாய் அலைய வேண்டி உள்ளதே என்று அவள் வருந்தும் நிகழ்வு மிகக் கொடுமையானது ஆகும்.

***"உறவுகளை முறித்து வாழ்பவர்கள் மறுமை நாளில் சொர்க்கத்தின் வாடையைக் கூட நுகர முடியாது" (அல் புகாரி – 5984)***

என்பது நபிமொழி. அதனால் தான் இஸ்லாம் தம் மார்க்கத்தின் கடமைகளில் ஒன்றான 'ஜகாத்' என்ற ஏழை வரியைக் கூட தன்னுடைய உறவினர்களில் யார் ஏழ்மையாக இருக்கிறார்களோ அவர்களுக்கு முதலில் வழங்கச் சொல்கிறது.

இஸ்லாம் சொல்லக்கூடிய வழிமுறைகளைப் பின்பற்றினால் இது போன்ற சிக்கல்கள் ஏற்படாது. முகம்மது நபி (ஸல்) அவர்கள் ஏழை பணக்காரன் என்று பாராமல் அனைவருடனும் அன்புடன் பழகியவர்கள். அவர்கள் ஏழைகளின் விருந்தையே அதிகமாக ஏற்றுக் கொண்டார்கள் "நாம் ஏழைகள் என்று யாரையும் அலட்சியமாக

நினைக்கக் கூடாது. அதிகமாக ஏழைகளைச் சொர்க்கத்தில் கண்டேன் ஏழையாகவே வாழ்ந்து மரணிக்க ஆசைப்படுகிறேன்'' என்று முகம்மது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இஸ்லாமியப் பெண்கள் பற்றிய பெரும்பாலான சிறுகதைப் பதிவுகள் திருமண வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களை ஒட்டியவை. குழந்தையின்மை, வரதட்சணை, உடல் நலக்குறைவு முதலிய காரணங்களுக்காக ஆண்கள் மணமுறிவு செய்வதாகப் பல கதைகள் பேசுகின்றன. தோப்பில் முகமது மீரானின் கதைகளில் பெற்ற தாய், வளர்ப்புத்தாய் என்று இரண்டு தாய்மார்கள் பற்றிய செய்திகள் உள்ளன. குழந்தையின்மை காரணமாகச் செய்யப்படும் மறுமணம் மூத்த மனைவியின் சம்மதத்தோடு நிகழ்த்தப்பட்டு கணவனின் குழந்தையைத் தானே வளர்ப்புத் தாயாக இருந்து கடைசி வரைப் பார்த்துக் கொள்பவளாகக் காட்டப்படுகிறாள். மேலும் தமிழக இஸ்லாமியர்களிடத்தில் இத்தகைய வழக்கம் பரவலாகக் காணப்படவில்லையெனினும் உடனுக்குடன் தலாக் சொல்லி மணமுறிவு செய்துகொள்கின்றனர். 'குட்டி ஆடு' என்னும் கதையில் மணமுறிவைக் காரணம் காட்டி ஆண் பல பெண்களைத் திருமணம் செய்யும் நிகழ்வுகள் இடம் பெறுகின்றன. தோப்பில் முகம்மது மீரானின் 'பல்லாங்குழி விளையாட்டு' என்னும் கதையில் மனைவியின் தங்கையை விரும்பி மணமுடித்துவிட்டு பின்பு அவள் ஊனத்தை காரணம் காட்டி மணவிலக்கு செய்கிறான். 'தலாக்' என்னும் மணமுறிவைத் தன் சுயநலத்திற்கான கருவியாகப் பயன்படுத்துவதை பல சிறுகதைகள் சித்தரிக்கின்றன. இவ்வாறு இஸ்லாமிய சமயம் வாழ்வியலுக்கான நெறிமுறைகளை வகுத்தளித்து இருப்பினும் அந்நெறியிலிருந்து வழுவியும் அல்லாது இயலாமையாலும் வாழும் இஸ்லாமியர்களைப் பற்றி இஸ்லாமியத் தமிழ்ச் சிறுகதைப் படைப்பாளர்கள் தங்கள் சிறுகதைகளில் பதிவு செய்துள்ளனர். இவற்றிலிருந்து இஸ்லாமியர்களில் வாழ்வில் நிகழும் நடப்பியலும் எதார்த்தவியலும் புலனாகிறது.

**தொகுப்புரை**

- எதார்த்தவியல் என்னும் இலக்கியக் கோட்பாட்டில் இடம்பெறும் கூறுகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.
- இஸ்லாமிய இலக்கிய உலகில் இஸ்லாமியத் தமிழ்ச்சிறுகதைகளை எழுதிய படைப்பாளர்கள் குறித்துப் பேசப்பட்டுள்ளன.
- சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் இஸ்லாமிய மார்க்கம் உரத்துப் பேசினாலும், சமத்துவம் மற்றும் சகோதரத்துவம் ஆகிய இரண்டிலிருந்தும் வழுவும் சில மனிதர்கள் இடம்பெறும் சிறுகதைகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.
- இஸ்லாமியர்களின் திருமணத்தில் வரதட்சணை தடையிடப்பட்டிருப்பினும், வரதட்சணையால் வருத்தமுறும் பெற்றோர்களின் நிலையினையும் 'வரதட்சணை' தர இயலாததால் திருமணம் ஆகாமல் இருக்கும் முதிர் கன்னியின் நிலையினையும் பேசும் சிறுகதைகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

- *பொருளாதாரத்தில் நலிந்து வறுமையில் வாழும் விளிம்பு நிலை மக்களின் வாழ்வியலை எடுத்துரைக்கும் சிறுகதைகளும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.*

**அடிக்குறிப்புகள்**


1. *ந. பிச்ச முத்து, இலக்கிய இயக்கங்கள், மூன்றாம் பதிப்பு 2006, சக்தி வெளியீடு, திருவல்லிக்கேணி, சென்னை – 05, மூன்றாம் பதிப்பு 2006*
2. *டாக்டர் அ.கா. பெருமாள் ஆய்வுக்கட்டுரைகள்,*
3. *தமிழ் இஸ்லாமியப் புனைகதைகள், ப. 70, முதல் பதிப்பு 2012, ராஜா வெளியீடு, திருச்சி - 20*
4. *ஜாகீர் ராஜா, செம்பருத்தி பூத்த வீடு, அனன்யா பதிப்பகம், தஞ்சாவூர், முதற் பதிப்பு, 2004*
5. *தோப்பில் முகம்மது மீரான், தஜ்ஜால் மேல் விழுந்த மாலை, ராஜராஜன் பதிப்பகம், 19 கண்ணடிவன் சாலை, சென்னை – 17, முதல் பதிப்பு 2001*
6. *தோப்பில் முகம்மது மீரான், விளக்கு சிறுகதை, ராஜராஜன் பதிப்பகம், 19 கண்ணடிவன் சாலை, சென்னை – 17, முதல் பதிப்பு 2001,*
7. *தோப்பில் முகம்மது மீரான், பவர்க்காரி சிறுகதை, ராஜராஜன் பதிப்பகம், 19 கண்ணடிவன் சாலை, சென்னை – 17, முதல் பதிப்பு 2001,*
8. *தோப்பில் முகம்மது மீரான், சுருட்டுப்பா சிறுகதை, ராஜராஜன் பதிப்பகம், 19 கண்ணடிவன் சாலை, சென்னை – 17, முதல் பதிப்பு 2001,*
9. *தோப்பில் முகம்மது மீரான், 'கருந்தேளின் கொடுக்குகள்', ராஜராஜன் பதிப்பகம், 19 கண்ணடிவன் சாலை, சென்னை – 17, முதல் பதிப்பு 2001,*
10. *களந்தை பீர்முகம்மது, கிளை நதிகள் சிறுகதை, பல்கலைப் பதிப்பகம், சென்னை – 24, முதல் பதிப்பு 2001,*
11. *அல் புகாரி - 5984*